RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 151 | ஜூன்.6, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பொள்ளாச்சி வழக்கில் தொடர்புபடுத்தி வீடியோ: யூடியூப் சேனல்கள் பதிலளிக்க ஐகோர்ட் கால அவகாசம்

சென்னை: ஜூன்.6-

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தங்களை தொடர்புபடுத்திய விவகாரத்தில் 1 கோடி ரூபாய் மான நஷ்ட ஈடு கேட்டு முன்னாள் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் தாக்கல் செய்த வழக்கில் யூடியூப் சேனல்கள் பதிலளிக்க கால அவகாசம் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



பொள்ளாச்சியில், கல்லுரி மாணவிகள் மற்றும் பெண்களை கடத்திச் சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து, ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்திய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கடந்த 2019ம் ஆண்டு நடந்த இச்சம்பவம் தொடர்பான வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி கோவை மகளிர் சிறப்பு நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், தங்களை தொடர்புபடுத்தி அவதூறு கருத்துகளை வெளியிட யூடியூப் சேனல்களுக்கு தடை விதிக்க கோரியும், 1 கோடி ரூபாய் மான நஷ்டஈடு வழங்க கோரியும் முன்னாள் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், அவரது மகன் பிரவீன் ஜெயராமன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நேற்று (ஜூன் 5) நீதிபதி குமரேஷ் பாபு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது யூடியூப் சேனல்கள் தரப்பில் பதில்மனு தாக்கல் செய்ய அவகாசம் கேட்கப்பட்டது. இதை ஏற்று கொண்டு ஜூன் 12ம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை அன்றைய தினத்துக்கு தள்ளிவைத்தார். அதுவரை இந்த விவகாரத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என இரு தரப்பினருக்கும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

## பண்ணைசாரா கடன் நிலுவையை வசூலிக்க சிறப்பு தீர்வை திட்டம்: அமைச்சர் பெரியகருப்பன் தகவல்

சென்னை: ஜூன்.6-

கூட்டுறவு வங்கி அல்லது சங்கங்களில் நீண்ட காலமாக வசூல் ஆகாமல் உள்ள, பண்ணை சாரா கடன்களை வசூலிக்க சிறப்பு கடன் தீர்வைத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.



கூட்டுறவுத் துறையின் சேவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், விளம்பரப்படுத்தப்பட்ட மாநகர பேருந்துகளை சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது, அவர் பேசியதாவது:

கூட்டுறவுத் துறையின் மூலமாக பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, பொதுமக்களின் இல்லங்களுக்கே சென்று உரிய பயன்களை வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறையின் வாயிலாக விவசாயிகளுக்கு தேவையான எண்ணற்ற திட்டங்களை வடிவமைத்து, விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறது.

கூட்டுறவுத் துறையின் மூலம் பயிர்க் கடனுதவி, கால்நடை பராமரிப்பு கடனுதவி, நகைக் கடனுதவி, சுயஉதவிக் குழு கடனுதவி, சிறு வணிக கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவி, பணிபுரியும் மகளிர் கடனுதவி, ஆதரவற்ற பெண்களுக்கான கடனுதவி, மத்திய கால கடனுதவிகள், பண்ணை சாரா கடனுதவிகள், தானிய ஈட்டு கடனுதவிகள், டாப்செட்கோ கடனுதவிகள், காலி வீட்டுமனை வாங்க கடனுதவிகள் மற்றும் இதர கடனுதவிகள் என மொத்தம் 34 வகையான கடனுதவிகள் கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம், தனிநபரின் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவியாகவும், சமுதாயத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக, நலிவடைந்த பிரிவினருக்கு கைகொடுத்து தூக்கி விடும் துறையாகவும் கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது. கடனாளிகளின் நிதிச் சுமையை குறைத்திடும் வகையில், கூட்டுறவு வங்கி அல்லது சங்கங்களில் நீண்ட காலமாக வசூல் ஆகாமல் உள்ள, பண்ணை சாரா கடன்களை வசூல் செய்ய தமிழக அரசால் சிறப்பு கடன் தீர்வைத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சேவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் சென்னை மாநகர் பகுதியில் இயங்கி வரும் 200 பேருந்துகளில் கூட்டுறவு சேவைகள் குறித்து விளம்பரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது, முதற்கட்டமாக விளம்பரப்படுத்தப்பட்ட மாநகர் பேருந்துகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். நிகழச்சியில், துறையின் செயலர் சத்யபிரதா சாஹூ, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 05.06.2025 அன்று சென்னையில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அவர்களுக்கு பசுமை விருது வழங்கினார்.

## மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜூன் 7ல் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்

சென்னை: ஜூன்.6-

உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக ஆலோசிப்பதற்காக, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் வரும் ஜூன் 7ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘ திமுக தலைவர் மு .க.ஸ்டாலின் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் ஜூன் 7ம் தேதி சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 1ம் தேதி, மதுரை உத்தங்குடியில் திமுக பொதுக்குழு கூட்டம் கட்சி தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. அதில், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்காளர்களை திமுகவில் உறுப்பினராக சேர்க்கும் வகையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற புதிய உறுப்பினர் சேர்க்கையை திமுக முன்னெடுக்க வேண்டும் என சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், வரும் 7ம் தேதி நடைபெறும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், திமுக உறுப்பினர் சேர்க்கை தொடர்பாகவும் ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.6-

தொகுதி மறுசீரமைப்பு பற்றி மத்திய அரசு விளக்க வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், “தேசிய அளவிலான சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 ஆம் ஆண்டு மார்ச் ஒன்றாம் தேதி முதல் நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. சமூகநீதியைக் காக்கவும், தொகுதி மறுசீரமைப்பு குறித்த சர்ச்சைகளுக்கு முடிவு கட்டவும் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக சாதிவாரி கணக்கெடுப்பைத் தொடங்க வேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தி வந்த நிலையில், மத்திய அரசின் இந்த அறிவிப்பு தென்னாட்டு, குறிப்பாக தமிழ்நாட்டு மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

தில்லியில் கடந்த ஏப்ரல் 30 ஆம் நாள் நடைபெற்ற அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், அடுத்து நடைபெறவிருக்கும் மக்கள்தொகை கணக்கெடுப்பு சாதிவாரி கணக்கெடுப்பாக நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்ட போது, இரு காரணங்களுக்காக சமூகநீதி ஆர்வலர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம் அனைத்து சமூகங்களுக்கும் அவற்றின் மக்கள்தொகைக்கு இணையாக இடஒதுக்கீடு செய்யப்படும். 2025 ஆம் ஆண்டிலேயே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டால், அதன்பின் 2035 ஆம் ஆண்டில் அடுத்த சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் வரை மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தொகுதிகள் மறுசீரமைக்கப்படாது. அதனால் தமிழகத்தில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக் குறையாது ஆகியவை தான் அந்த இரு காரணங்களாகும். ஆனால், மத்திய அரசின் அறிவிப்பு மூலம் ஒரு மாதத்திற்கும் மேலாக நிலவி வந்த மகிழ்ச்சி மறைந்து மக்களிடம் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது.

மக்கள்தொகை அடிப்படை யிலான தொகுதிகள் மறுசீரமைப்பு கடந்த 50 ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டு வரும் நிலையில், 2026-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால், மக்கள்தொகை பெருக்கத்தை மிகச்சிறப்பாக கட்டுப்படுத்திய தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கை வெகுவாக குறையும்.

இதைத் தவிர்க்க வேண்டும் என்றால், நாடு முழுவதும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு உயர்த்தப்படுகிறதோ, அதே அளவில் தமிழகத்திலும் உயர்த்தப்பட வேண்டும் அல்லது தொகுதிகள் மறுசீரமைப்பை கைவிட்டு இப்போதுள்ள நிலையே தொடர அனுமதிக்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். இது தான் நியாயமானதாகும்.

ஒருவேளை அதற்கு வாய்ப்பில்லை என்றால், 2025 ஆம் ஆண்டிலேயே மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதன் மூலம், தொகுதிகள் மறுசீரமைப்பை 2035-ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்க முடியும் என்றும் பா.ம.க. வலியுறுத்தி வந்தது. ஆனால், அதை ஏற்காமல், 2027ஆம் ஆண்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்றால், அதனடிப்படையில் தொகுதிகள் மறு சீரமைப்பு மேற்கொள்ளப்படும்; அதனால் தமிழகத்தில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக் குறையும் என தமிழக மக்கள் அஞ்சுகின்றனர். தமிழக மக்களின் இந்த நியாயமான அச்சத்தைப் போக்க வேண்டியது மத்திய அரசின் கடமை ஆகும்.

இன்னொருபுறம் 2027 ஆம் ஆண்டில் தான் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடங்கும் என்பதால், 2030 ஆம் ஆண்டு வரை சாதிவாரி மக்கள்தொகை விவரங்கள் வெளியாவதற்கு வாய்ப்புகள் இல்லை. மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பில் சமூக, கல்விரீதியாக பின்தங்கியுள்ள மக்களின் முழுமையான விவரங்கள் வெளிவராது என்றாலும் கூட, 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பது உள்ளிட்ட அவசரக் தேவைகளுக்காவது அந்த விவரங்கள் பயன்படும்.

ஆனால், அந்த விவரங்கள் கூட இன்னும் ஐந்தரை ஆண்டுகளுக்கு கிடைக்க வாய்ப்பில்லை எனும் சூழலில் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69% இட ஒதுக்கீட்டுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 69% இட ஒதுக்கீட்டுக்கு எதிராக தொடுக்கப்பட்ட பல வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். அந்த வழக்குகளின் விசாரணையின் போது, 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றால் சாதிவாரி மக்கள்தொகை விவரங்கள் தேவையாகும்.

மத்திய அரசின் சார்பில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் கூட, தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டுவதற்கு மாநில அளவிலும் சாதிவாரி சர்வே எடுக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தி வருகிறேன். தேசிய அளவில் எடுக்கப்படும் கணக்கெடுப்பு மனித தலைகளை சாதிவாரியாக எண்ணும் நடைமுறை தான். மாநில அளவில் உள் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு இன்னும் அதிகமான தரவுகள் தேவை. அதனால் தான் மாநில அளவில் சாதிவாரி சர்வே நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன்.

இப்போது மத்திய அரசின் சார்பில் உடனடியாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது உறுதியாகி விட்ட நிலையில், தமிழக அரசு சூழலின் தீவிரத்தன்மையை புரிந்து கொண்டு, 2008 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி தமிழ்நாட்டில் சாதிவாரி சர்வே நடத்துவதற்கான அறிவிப்பை, தமிழக அரசு வெளியிட்டு கணக்கெடுப்புப் பணிகளை தொடங்க வேண்டும். அதேபோல், மத்திய அரசும் மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில், மக்கள்தொகை அடிப்படை யிலான மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரயில்வே திட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை: தெற்கு ரயில்வே தகவல்

சென்னை: ஜூன்.6-

தமிழகம், கேரளாவில் ரயில்வே திட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. தமிழகம் மற்றும் கேரளாவில் மொத்தம் 12 ரயில்வே திட்டங்களுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ.727 கோடியை தெற்கு ரயில்வே திரும்ப ஒப்படைத்ததாக அண்மையில் தகவல் வெளியாகின. இதற்கு தெற்கு ரயில்வே ஏற்கெனவே விளக்கம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், தமிழகம், கேரளாவில் ரயில்வே திட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இது குறித்து, தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பு: நடப்பு காலாண்டுக்குள் பயன்படுத்தப்படாமல் இருக்கும் சில திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, அடுத்தடுத்த காலாண்டுகளில் பயன்படுத்த முயற்சி செய்யப்படும் என்று ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே அனுப்பிய வழக்கமான அதிகாரப் பூர்வ கடிதப் பரிமாற்றம், சில ஊடகங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்களில் தெற்கு ரயில்வேயின் திட்டங்களுக்கு நடப்பு நிதியாண்டில் பல்வேறு ரயில்வே பணிகளுக்காக, ஒதுக்கப்பட்ட நிதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று ரயில்வே அமைச்சகம் முடிவு செய்து தெரிவித்துள்ளது. மேலும், 202526 நிதியாண்டிற்கான அமைச்சகத்தால் அந்தந்த திட்டங்களுக்கு வழங்கப்பட்ட அசல் பட்ஜெட் ஒதுக்கீடு, நிதியின்படி தெற்கு ரயில்வே தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தாம்பரம் மாநகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர்

# டாக்டர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தாம்பரம், ஜுன்.6

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கு விழா நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற மக்களவை குழுத்தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, கழக தேர்தல் பணிக்குழு கம்பம் செல்வேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்எல்ஏ, மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, மேயர். க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, இரா.நரேஷ்கண்ணா, வ.விஜயரங்கன், பி.சதாசிவம், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் பகுதி கழக செயலாளர்கள் இரா.சுரேஷ், த.ஜெயகுமார், இ.எஸ். பெனார்ட், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், மு.ரஞ்சன், எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பி.கே.பி.சத்தியபிரபு, ரமணி ஆதிமூலம், இ.மனோகரன், இரா. விஜயகுமார், மலர் மு.கருணாநிதி, இரா. ரத்தினகுமார், டைகர் சிவா, தி.ச.நடராஜன், கோ.தேனுபுரி, எம்.டி.விஜயகுமார், வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன், ச.பிரபு, ஜே.இன்சாமம் உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியில் ஆர்.செல்வகுமார் நன்றி உரையாற்றினார்



# பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் டாக்டர் கலைஞர் பிறந்தநாள் கொண்டாட்டம்

பம்மல், ஜுன்.6

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா பம்மல் மண்டல குழுத் தலைவரும், தெற்கு பகுதி செயலாளருமான வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா. கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கி பிறந்தநாள் விழா வெகு விமர்சியாக கொண்டாடபட்டது. பிறந்தநாள் விழாவின் கலைஞர் ஆட்சியின் போது மக்களுக்காக பல்வேறு நலதிட்டங்களை செய்தவர் என்றும் கொண்டுவரபட்ட திட்டங்கள் அனைத்தும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி கொண்டிருக்கின்றார் என பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மற்றும் பம்மல் மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி சிறப்புரையாற்றினார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி. மதினாபேகம், சத்யா மதியழகன், ரம்யாசத்ய பிரபு. உட்பட தெற்கு பகுதிகழக நிர்வாகிகள் மற்றும் மகளிரணியினர் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிப்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையத்தில் மாணவ, மாணவிகளுக்கு போட்டித் தேர்வுக்கான புத்தகங்களை வழங்கி பேசினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், மற்றும் பலர் உள்ளனர்.

# மானாமதுரை அருகே செய்களத்தூரில் வனத்துறையினர் நாற்றாங்கால் பண்ணை அமைக்க உயர்நீதிமன்றம் தடை

## வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ள மாவட்ட ஆட்சியர் உத்தரவு

மானாமதுரை ஜூன்.6

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம், செய்களத்தூர் உள்வட்டத்தில் , நத்தபுரக்கி, கண்மாய் பட்டி, என். வலசை, சிப்பிப்பிலியேந்தல், சந்திரனேந்தல், நெடுங்குளம், புளிச்சிக்குளம், குருந்தங்குளம், செய்களத்தூர் சின்னக் கண்மாய்,

வஞ்சிக்குளம் ஆகிய பத்து மழைநீரை மட்டுமே நம்பியுள்ள ஏந்தல் கண்மாய்களுக்குச் செல்லும் வரத்துக்கால்களைத்

தடுத்து வனத்துறையினர் நாற்றாங்கால் பன்னை அமைக்க முழு வீச்சில் ஏற்பாடுகள் செய்து வந்தனர். இங்குள்ள பத்துக் கண்மாய் பாசன விவசாயிகள் கடும் எதிர்ப்பாக முற்றுகை போராட்டங்கள், சாலை மறியல்கள் நடத்தினர். ஆனால்

வருவாய்த் துறையினரையும் காவல் துறையினரையும்... வைத்துக் கொண்டு வனத்துறையினர் மேற்கண்ட பத்துக் கண்மாய்களுக்குச் செல்லும் வரத்துக் கால்களை மூடி கட்டிடங்கள், முள்வேலிகள் அமைத்து நாற்றாங்கால் பன்னை அமைத்து வந்தனர். இதனால் மேற்கண்ட கண்மாய் விவசாயிகள் சார்பாக

1. இராம. முருகன்
2. ஆ.கோவிந்தராஜ்
3. கே.பாலகிருஷ்ணன்

ஆகியோர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பொது நல வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த மாண்பமை நீதிபதிகள் நிஷாபானு ஸ்ரீமதி ஆகியோர் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்களத்தூர் ஊராட்சியில் சிறப்புக் கிராமசபையைக்கூட்டி கிராமப் பொதுமக்களின் ஒப்புதல் பெற்றால் மட்டுமே வனத்துறை நாற்றாங்கால் பன்னை அமைக்கலாம் பொதுமக்கள் கிராமசபையில் ஒப்புக் கொள்ளாவிடில் சம்மந்தப்பட்ட புஞ்சை நிலத்தில் எவ்வித வேலையும் செய்தல் கூடாது என உத்தரவிட்டது.

அதன் பிறகு கடந்த மார்ச் 30 ஆம் தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் செய்களத்தூரில் சிறப்புக்கிராமசபைக்கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட கல்குறிச்சி மற்றும் செய்களத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பத்துக் கண்மாய் விவசாயிகளும் பொதுமக்களும் மாவட்ட ஆட்சியரிடம் இந்த வனத்துறையினரின் அத்துமீறல்களால் விவசாயமும், கால்நடை வளர்ப்பும் முற்றிலும் பாதிக்கப்படுவதாக கடும் ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர். இதனால் வனத்துறை கொண்டு வந்த சிறப்புத் தீர்மானத்தை அனைவரும் நிராகரித்தனர்.

அதன் பிறகு கோடை விடுமுறைக்குப் பின் உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கிராம சபையில் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் நாற்றாங்கால் பன்னையை சுந்தரநடப்பில் உள்ள மத்திய நாற்றாங்கால் பன்னைக்கு மாற்றி எடுத்துச் செல்வதாக உறுதியளித்ததன் பேரில் மாண்பமை நீதிபதிகள் செய்களத்தூரில் நாற்றாங்கல் அமைப்பதை தடை செய்து மாற்று இடத்திற்கு எடுத்துச் செல்ல உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.



# அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை கணினி ஆசிரியர் பதவிக்கு புதிய கல்வித் தகுதி

## பள்ளிக்கல்வித் துறை அரசாணை வெளியிடு

சென்னை, ஜூன்.06-

அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை கணினி ஆசிரியர் பதவிக்கு (கணினி பயிற்றுநர்) புதிய கல்வித் தகுதியை நிர்ணயித்து பள்ளிக்கல்வித் துறை அரசணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக்கல்விதுறை செயலர் பி.சந்திரமோகன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: மேல்நிலைக்கல்வியில் கணினி பயிற்றுநர் (கிரேடு1) பதவியும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பதவியும் ஒன்றுபோல் இருப்பதால், கணினி பயிற்றுநர் (கிரேடு1) பதவி தமிழ்நாடு மேல்நிலைக்கல்வி பணி சிறப்பு விதியுடன் இணைக்கப்படுகிறது.

இப்பதவிக்கான கல்வித்தகுதி பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது. கணினி பயிற்றுநர் பதவிக்கு எம்.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டப் படிப்பும், பி.எட். பட்டமும் பெற்றிருக்க வேண்டும். அல்லது எம்.எஸ்சி. படிப்புடன் ஒருங்கிணைந்த பி.எஸ்சி. பி.எட். அல்லது பி.ஏ., பி.எட். பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், இளங்கலை பட்டமும், முதுகலை படிப்பும் ஒரே பாடத்தில் பெறப்பட்டதாக இருக்க வேண்டும். இவ்வாறு அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

பழைய அரசாணையின்படி, கம்ப்யூட்டர் சயின்ஸ், கம்ப்யூட்டர் இன்ஜினியரிங், இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, சாஃப்ட்வேர் டெக்னாலஜி பாடங்களில் எம்.டெக். அல்லது எம்.இ. பட்டமும், பி.எ.ட் பட்டமும் பெற்றவர்களும் கணினி பயிற்றுநர் பதவிக்குத் தகுதியானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், தற்போது வெளியிடப்பட்ட புதிய அரசாணையின்படி, எம்.இ. எம்.டெக்.பட்டதாரிகள் இந்தப் பணிக்கு தகுதியில்லை என்று கூறப்பட்டுள்ளது.



# இராமநாதபுரத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜூன்.6-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மரக்கன்றுகள் நடும் பணிகளை துவக்கி வைத்தார்.

ஆண்டுதோறும் ஜுன் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் நாளாக கொண்டாடப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் இயற்கையை காப்பாற்றத் தேவைப்படும் சுற்றுச்சூழல் செயல்பாட்டை பற்றிய நேரடியான உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்த கொண்டாடப்படுகின்றது. பெருகிவரும் மக்கள் தொகையாலும், தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளிவரும் கழிவுகள் மற்றும் நச்சுப்புகைகள் காற்றுமண்டலத்தில் கலந்து சுற்றுச்சூழலை மாசடையச் செய்கின்றன. எனவே இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் மரக்கன்றுகளை நடவு செய்வதால் உண்டாகும் நன்மைகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு மற்றும் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கர்ப்பிணிகள், முதியோர் முக கவசம் அணிய வேண்டும்: சுகாதார துறை அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை: ஜூன்.6-

கரோனா பாதிப்புகள் குறித்து பெரிய அளவில் அச்சப்பட தேவையில்லை. எனினும், பொது இடங்களுக்கு செல்லும்போது கர்ப்பிணிகள், முதியவர்கள், இணை நோய் உள்ளவர்கள் முக கவசம் அணிய வேண்டும் என்று சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில் நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்புமிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமை சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார். அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

கரோனா பரவலுக்கு பிறகு, இதய பாதிப்புகள், நுரையீரல் பாதிப்புகள் அதிகரித்துள்ளன. இந்தியாவில் நீடித்த நுரையீரல் அடைப்பு நோயால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்படுகிறது. நீண்ட காலமாக புகை பிடிப்பது, காற்று மாசு, தொழில்சார் நோய் பாதிப்புகள் போன்றவைதான் இதற்கு முக்கிய காரணமாக உள்ளன.

அதேபோல, கொழுப்புமிகு கல்லீரல் நோய் என்பதும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது. நமது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் உலகம் முழுவதும் சுமார் 30 சதவீத மக்கள் இந்த நோய் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். மேற்கண்ட 2 நோய்கள் குறித்து கள பணியாளர்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், பாதம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு திட்டங்களின் தொடர்ச்சியாக ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ என்ற திட்டத்தை முதல்வர் விரைவில் சென்னையில் தொடங்கி வைக்க உள்ளார். கரோனா பாதிப்புகள் குறித்து பெரிய அளவில் அச்சப்பட தேவையில்லை. தமிழகத்தில் 216 பேர் கண்காணிப்பில் உள்ளனர். 3 நாட்களில் சளி, இருமல், தொண்டை வலி, காய்ச்சல் பாதிப்புகள் குணமடைகின்றன. இதுபோல பாதிப்புகளுக்கு உள்ளானவர்களை அந்தந்த மாவட்ட சுகாதார அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.



நோய் பாதிப்பு உள்ளவர்கள் பொது இடங்களில் இருமினாலோ, தும்மினாலோ அவர்களது எச்சில் துகள் காற்றில் பரவக்கூடும். இதன்மூலமாக, எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள், முதியவர்கள், இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

எனவே, மத்திய சுகாதார துறை அறிவுறுத்தலின்படி, பொது இடங்களுக்கு செல்லும் கர்ப்பிணிகள், முதியவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள், இணைநோய் பாதிப்பு உள்ளவர்கள் முக கவசம் அணிய வேண்டும். தனிமனித இடைவெளியை கடைபிடிப்பது, அடிக்கடி சோப் போட்டு கைகளை கழுவுவது நல்லது. இணை நோய் உள்ளவர்கள் உயிரிழக்கும்போது, கரோனா தொற்று கண்டறியப்பட்டால், அது கரோனா இறப்பாக கருதப்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

சுகாதார துறை செயலர் ப.செந்தில்குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் செல்வவிநாயகம், மருத்துவம், ஊரக நல பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி, இணை இயக்குநர் (தொற்றா நோய்) கிருஷ்ணராஜ், திட்ட அலுவலர் (தொற்றா நோய்) பிரவீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





# பழனியில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பட்டாகத்தி மற்றும் வாளுடன் சுற்றிய இரண்டு வாலிபர்கள் கைது

திண்டுக்கல், ஜூன்.6

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் கையில் பட்டாகத்தி மற்றும் வாளுடன் இருந்த இரண்டு இளைஞர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக நேற்று காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் ஆய்வாளர் மணிமாறன் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கும் பொழுது பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் என பலரும் கூட்டமாகவும், பரபரப்பாகவும் காணப்பட்டுள்ளனர்.

எனவே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த சார்பு ஆய்வாளர் விஜய் அந்த இடத்தில் சென்று விசாரிக்கும் பொழுது

ராமர் மற்றும் தமிழ்ச்செல்வன் என இரண்டு நபர்கள் பட்டாகத்தி மற்றும் வாளுடன் வித்தை காட்டுவது போல் அங்கு உள்ளவர்களை மிரட்டியும் உள்ளனர் என தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து காவல் சார்பு ஆய்வாளர் விஜய் அவர்களிடம் இருந்த ஆயுதங்களை கைப்பற்றி இருவரையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறைப்படுத்தப்பட்டனர்.

முன்னதாக பொது இடத்தில் இளைஞர்கள் ஆயுதங்களுடன் சுற்றி திரிந்தது பழனி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# குறளகம் கட்டிடத்தை புதுப்பிக்க திட்டம்: பிராட்வேயில் ரூ.566 கோடி செலவில் ஒருங்கிணைந்த போக்குவரத்து வளாகம்

சென்னை: ஜூன்.6-

பிராட்வேயில் உள்ள குறளகம் கட்டிடத்தை புதுப்பித்தல், பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து வளாகம் அமைப்பதற்கு ரூ.566.59 கோடியில் பிரிட்ஜ் அண்ட் ரூஃப் (இந்தியா) நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் தமிழக தொழில் துறை மேம்பாட்டுக் கழகம் இணைந்து சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் என்ற சிறப்பு நிறுவனத்தை உருவாக்கின. இந்நிறுவனம் சார்பில், பிராட்வேயில் உள்ள குறளகம் கட்டிடத்தை புதுப்பிப்பதற்கும், பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து வளாகம் (Multimodal Facility Complex – MMFC) அமைப்பதற்குமான முக்கிய ஒப்பந்தம் ரூ.566.59 கோடியில் பிரிட்ஜ் அண்ட் ரூஃப் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. இதில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் தலைவர் எம்.ஏ.சித்திக் முன்னிலையில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் இயக்குநர் தி.அர்ச்சுனன் மற்றும் பிரிட்ஜ் அண்ட் ரூஃப் நிறுவனத்தின் பொறியியல் குழு பொது மேலாளர் சஞ்சய் பட்டாச்சார்யா ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவன அதிகாரிகள் கூறுகையில், ``இந்த ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம், நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம், வர்த்தக வளாகங்களுடன் இணைந்து அமையவுள்ளது. இந்த பேருந்து முனையம் (அடித்தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளம்) 24 மாதங்களுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து வளாகம் மற்றும் குறளகம் கட்டிடம் 30 மாதங்களுக்குள்

நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்றனர். இந்த வளாகம், நகரத்தின் பல பகுதிகளிலிருந்து எளிதாக அணுகக்கூடிய வகையில் அமைக்கப்படும். பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து வளாக கட்டிடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் பேருந்து நிறுத்தங்கள் இடம்பெறும். மொத்தம் 73 பேருந்து நிறுத்தங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. கட்டிடத்தில் 2வது முதல் 8வது தளம் வரை அலுவலக இடங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.



■ பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் , மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் களியக்காவிளையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தாரகை கத்பர்ட் உட்பட பலர் உள்ளார்கள்.





# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக உலக சுற்றுச்சூழல் தினம் : மரக்கன்றுகளை பெற்றுக்கொண்டு மாணவர்கள் மகிழ்ச்சி

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் நிஷா வாய்ஸ் பவுண்டேசன் இணைந்து நடைபெற்றது

காளையார் கோவில் ஜூன். 06

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் உலக சுற்றுச்சூழல் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆசிரியை வாசுகி வரவேற்றார். நிஷா வாய்ஸ் பவுண்டேஷன் நிறுவனர் கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுற்றுச்சூழல் குறித்து சிறப்புரையாற்றினார். சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி பசுமை உறுதிமொழி கூற அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். மாணவ மாணவிகள் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்திற்கான கருப்பொருள் நெகிழி மாசுபாட்டை முறியடி என்பதாகும். நெகிழிக் கழிவுகள் சுற்றுச்சூழல் அமைப்புகள் வனவிலங்குகள் மற்றும் மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த பிரச்சாரத்தினுடைய நோக்கமாக கொண்டு மீண்டும் மஞ்சள் பையை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி மஞ்சள் பை வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் குறித்து வினாடிவினாப் போட்டி நடத்தப்பட்டு சான்றிதழ்கள் மஞ்சள் பை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. பள்ளி வளாகத்தில் யாவரும் கேளீர் அணிகள் சார்பாக மரக்கன்றுகள் நடப்பட்டன. ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

# மது பிரியர்களால் சுகாதார சீர்கேடு





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மூங்கில் ஊரணி பகுதியில் அரசு மதுபான கடை (7344) அமைந்துள்ளது மதுபானம் வாங்குபவர்கள், மதுபானக் கடை முன்பும், சாலையோரத்திலும், அருகில் உள்ள பொது இடங்களிலும் அமர்ந்து மது அருந்திவிட்டு கண்ணாடி பாட்டில்கள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகளை பொது இடங்களிலும், கால்வாய்களிலும் வீசி செல்கின்றனர். இதனால் பொதுமக்களுக்கு அப்பகுதி மக்களுக்கும் தீங்கு விளைவிக்கிறது மது அருந்துபவர்கள், சுற்றுப்புறத்தையும் அசுத்தப்படுத்திவிட்டு செல்வதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக சமூக ஆர்வலர் மற்றும் பொதுமக்கள்வருத்தம் தெரிவித்து வருகின்ற இது குறித்து மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.





# தாம்பரத்தில் 4வது மண்டலத்திற்குட்பட்ட 55வது வார்டில் புதிய தார்சாலை மற்றும் 56வது வார்டு ஏபிஜே அப்துல் கலாம் பூங்கா சீரமைப்பு பணியினை எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ துவங்கி வைத்தார்

தாம்பரம், ஜூன்.6

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்குட்பட்ட 55வது வார்டு கண்ணன் அவன்யூ, ராஜேஸ்வரி அவன்யூ, குட்வில் நகர்,பாரதி நகர், விஷ்ணு நகர் ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி 2 கோடியே 6 லட்சம் மற்றும் 56வது வார்டில் 4.68 கோடி மதிப்பில் நல்ல தண்ணீர் குளம் மற்றும் ஏபிஜே அப்துல் கலாம் பூங்கா சீரமைக்கும் பணியினை பூமி பூஜையை தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா. எம்,எல்,ஏ துவங்கி வைத்தனர் இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி. காமராஜ், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, கழக பேச்சாளரும் முன்னாள் மாவட்ட பிரதிநிதி எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் நல சங்க நிர்வாகிகள், ஒப்பந்ததாரர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நன்மங்கலம் ஏரி சுற்றுவட்டார பகுதியில் தாம்பரம் மாநகராட்சி , நன்மங்கலம் ஊராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து சுத்தம் செய்தனர்

நன்மங்கலம் ஜூன்.6

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையர் பஞ்சாயத்து யூனியன் உட்பட்ட ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக நன்மங்கலம் ஏரியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஏரிகளை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழுவினர் சார்பில் துப்புரவு பணியாளர்கள் உடன் இணைந்து சமூக ஆர்வலர்கள் ஜலரக்ஷனா, சிட்லப்பாக்கம் ரைசிங் குழு, எக்ஸ்னோரா, இஎஃப்ஐ , கல்லூரி மாணவர்கள் இணைந்து செம்பாக்கம் தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நல சங்கங்கள், நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நன்மங்கலம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை



சுத்தம் செய்தனர் மற்றும் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நன்மங்கலம் ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் ஏரியில் சுற்றியுள்ள அனைத்து தன்னார்வலர்கள், அசோசியேஷன் நகர் மற்றும் குடியிருப்பு வாசிகள் ,என்ஜிஓ மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், என்சிசி மாணவர்கள் ,சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# பரந்தூர் விமான நிலைய கட்டுமானப் பணிகள்: முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை

சென்னை: ஜூன்.6-

பரந்தூர் விமான நிலைய கட்டுமானப் பணிகளை தொடங்குவது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று ஆலோசனை நடைபெற்றது.




சென்னையின் 2வது பசுமை விமான நிலையம் காஞ்சிபுரம் அருகே உள்ள பரந்தூர், நெல்வாய், நாகப்பட்டு, இடையர்பாக்கம், ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராமங்களை உள்ளடக்கி சுமார் 5300 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்புகளை மத்திய, மாநில அரசுகள் வெளியிட்டு நிலம் கையகப்படுத்துவதற்கான அறிவிப்புகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தால் பாதிக்கப்படக் கூடிய ஏகனாபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பரந்தூர் விமான நிலையத்துக்கான திட்ட அனுமதிக்கு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் கடந்த ஏப்ரல் மாதம் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. பின்னர் திட்டப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கான ஒப்பந்தம் டிட்கோவால் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று தலைமைச் செலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில், பரந்தூர் விமான நிலைய கட்டுமானப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, செயலர் அருண்ராய் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நில எடுப்பு பணிகள் முடிக்கப்பட்டு, அடுத்தாண்டு கட்டுமானப் பணிகளை தொடங்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

# மதுரை அருகே 800 ஆண்டு பழமையான சிவன் கோயில் கண்டுபிடிப்பு: வரலாற்றுக்கு புதிய வரவு என ஆய்வாளர்கள் பெருமிதம்

மதுரை: ஜூன்.6-

மதுரை அருகே 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் கோயில், கிராம மக்களால் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இது வரலாற்றுக்குப் புதிய வரவாகும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் பெருமிதம் தெரிவித்தனர்.



இதுகுறித்து வரலாற்று ஆர்வலர்களும், சிற்பத்துறை, தொல்லியல் ஆய்வாளர்களுமான தேவி, அறிவுச் செல்வம் ஆகியோர் கூறியதாவது:

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் மலம்பட்டி ஊராட்சியின் சிற்றூர் உடன்பட்டி. இவ்வூரில் ஒட்டக்கோயில் என அழைக்கப்பட்ட பழைய சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலின் அதிஷ்டானப் பகுதி முழுவதும் தமிழ் கல்வெட்டுகள் உள்ளன. அதில் இவ்வூரின் பழமையான பெயர் 'ஆற்றூர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிதைந்துபோன சிவன் கோயிலின் மூலவர் பெயர் தென்னவனீசுவரம். இங்குள்ள கல்வெட்டுகள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்தது. கி.பி.12171218ம் ஆண்டுகளில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. அழகப்பெருமாள் எனும் களவழி நாட்டுத் தலைவன் தனக்கு உரிமையான நாகன்குடி என்னும் ஊரின் குளத்தையும், அதனைச் சுற்றியுள்ள நன்செய், புன்செய், தோட்டம், துரவு அனைத்தையும் ஆற்றூர் நம்பி பேரம்பலக் கூத்தன் என்னும் காங்கேயன் தலைவனுக்கு 64 காசுகளுக்கு விற்றுள்ளான் என்ற செய்தியை கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது.

இந்நிலங்களால் கிடைக்கும் வருவாய் இவ்வூரில் உள்ள தென்னவனீசுவரம் எனும் சிவன் கோயிலின் அன்றாடச் செலவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றுமொரு துண்டுக் கல்வெட்டு திருநோக்கு அழகியான் என்பான் தன் பெயரில் திருநோக்கு அழகிய விநாயகப் பிள்ளையாரையும், மற்ற பரிவார தெய்வங்களையும் இக்கோயிலில் எடுப்பித்தான் என்ற செய்தியைத் தருகிறது. இப்புதிய கல்வெட்டு மூலம் 800 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கோயில் அமைப்பு: கோயில் அமைப்பு கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், நுழைவு வாயில் என்று மிகப்பெரிய வளாகத்தில் அமைந்து தற்போது சிதைந்துள்ளது. இக்கோயிலில் பரிவார தெய்வங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, அம்மன் இருந்திருக்கிறார்கள். கல்வெட்டில் வரும் விநாயகர் திருமேனியைக் கண்டறிய வேண்டும். தட்சிணாமூர்த்தி சிலையின் தலைப்பகுதி வரை மண்மூடி இருந்தது.

அம்மன் சிலையானது சில ஆண்டுகளுக்கு முன்பு முல்லையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது. இப்பொழுது தட்சிணாமூர்த்தியின் சிலை தோண்டி வெளிக்கொணரப்பட்டும், அம்மன் சிலையானது முல்லையாற்றின் மற்றொரு கரையில் எடுத்து வைக்கப்பட்டும் வழிபாடு செய்யப்படுகிறது. கோயில் அமைப்பைப் பார்க்கும்பொழுது சிகரம், கலசம் இல்லாமல் கட்டப்பட்ட பாண்டியர்களின் கோயிலாகத் தோன்றுகிறது.

கல்வெட்டை வாசித்த தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தைச் சேர்ந்த உதயகுமார், முத்துப்பாண்டி, முருகன் ஆகியோர் இந்த ஆய்வுக்கு உதவியாக இருந்தனர். இவ்வாறு கூறினர்.





# கோவிலம்பாக்கம் ஊராட்சி திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி 102 வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம்

கோவிலம்பாக்கம், ஜூன்.06

சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரமான, மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ச.அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப் படியும், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியில் போலீஸ் பூத் அருகில் திமுக கழகப் பெருந்தலைவர், கோவிலம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான, முனைவர். அ. ரங்கநாதன் மற்றும் மாவட்ட பிரதி நிதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி 5வது வார்டு கவுன்சிலரமான ர. சொக்கலிங்கம் தலைமை நிகழ்ச்சி ஏற்பாட்டில் முன்னாள் முதல்வர், டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி டாக்டர் கலைஞர் கருணாநிதி திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, கேக் வெட்டி, அருண்சுவை விருந்து அனைவரும் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# மதுரையில் மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம்

மதுரை, ஜூன்.6-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள. சங்கீதா, தலைமையில், நான் முதல்வன் திட்டம், கல்லூரிக் கனவு 2025ன்கீழ் மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா, தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு மாணவ, மாணவியர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், நான் முதல்வன் திட்டம் கல்லூரிக் கனவு 2025ன்கீழ், 12ஆம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல், தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணைத்தேர்வு எழுதுதல் ஆகியவற்றிற்கு உறுதுணை செய்திடும் நோக்கில் சிறப்பு முகாம் நடத்திட உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வழிவகை செய்கிறது. மேலும், உயர்கல்வி படிப்பிற்கு கல்வி உதவித் தொகை பெற வழிகாட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வாய்ப்பாக அமைகிறது. மாணவர்களின் கல்வி நலன் கருதி கல்வி தொடர்பான கோரிக்கைகள் மட்டுமல்லாது வைக்கும் பிற அடிப்படை கோரிக்கைகள் குறித்தும் இந்த முகாமில் தீர்வு காண முடியும்.

மேலும், மாவட்ட அளவில் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டல் தொடர்பான கட்டுப்பாட்டு அறை / உதவி மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் ஜூன் 5 முதல் அக்டோபர் 25ஆம் தேதி வரை செயல்படுத்தப்படும். இதனை 0452 ரூ 2522995, 72006 47475 ஆகிய எண்களில் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 வரை தொடர்பு கொள்ளலாம். மேலும், கூடுதல் விவரங்களுக்கு மதுரை தல்லாகுளத்தில் உள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் . மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.ரேணுகா , மாவட்ட கல்வி அலுவலர் (மேலூர்) பெ.இந்திரா உட்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அரசு பேருந்துகளில் 'தமிழ்நாடு' பெயர் நீக்கமா?

## அமைச்சர் சிவசங்கர் விளக்கம்

அரியலூர்: ஜூன்.6-

அரசுப் பேருந்துகளில் 'தமிழ்நாடு' என்ற பெயர் நீக்கப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சைக்கு, அதிமுக ஆட்சிக் காலத்திலேயே அரசு போக்குவரத்துக் கழகம் என்றுதான் பெயர் இருந்தது என்று போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விளக்கம் அளித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் செந்துறையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பேருந்துகளில் அரசுப் போக்குவரத்துக் கழகம் என உள்ளது. தமிழ்நாடு என்ற பெயரைக் காணவில்லை என்ற சர்ச்சை சமீபத்தில் எழுந்துள்ளது. 2012ம் ஆண்டு ஜெயலலிதா புதிய பேருந்துகளை தொடங்கிவைத்தபே்தே அரசுப் போக்குவரத்துக் கழகம் என்றுதான் உள்ளது.



ஏனெனில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் என்பது நீண்ட பெயராக இருப்பதால், பேருந்தின் முன்பகுதியில் எழுதினால் படிக்க வசதியாக இருக்காது என அதிமுக ஆட்சியின்போது மாற்றப்பட்டது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு புதிய செய்திபோல, சிலர் தேவையற்ற சர்ச்சைகளை கிளப்பி வருகின்றனர்.

அதிமுக ஆட்சிக்காலத்தில் போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்ட இடங்களில் தற்போது மீண்டும் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல, புதிய வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எதை குற்றம் சொல்வது என தெரியாமல் இந்தப் பிரச்சினையை உருவாக்கி உள்ளனர்.

கடந்த ஓராண்டில் 7.20 லட்சம் பேர் அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணித்துள்ளனர். அதற்கு முந்தைய ஓராண்டில் 6.60 லட்சம் பேர் அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணம் செய்துள்ளனர். இதன்படி, ஓராண்டில் ஒரு லட்சம் பேர் கூடுதலாக பயணம் செய்துள்ளனர். அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதே இதற்கு காரணம். இவ்வாறு அவர் கூறினார்.





# ஜூன் 5 ல் 72 வது பிறந்தநாள் விழா கண்ட கோவிலம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அ. ரங்கநாதன்

கோவிலம்பாக்கம் ஜூன்.06

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், கோயிலம்பாக்கம் ஊராட்சியில் ஜூன் 5 ல் 72 வது பிறந்தநாள் விழா கண்ட கோவிலம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், அ. ரங்கநாதன் தனது இல்லத்தில் பிறந்தநாள் விழாவை திமுக கழக பெருந்தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை பொது குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் வண்ண வண்ண சால்வை அணிவித்து தலை கிரீடம் ஆள் உயர மாலை அணிவித்து, கேக்குகளை வெட்டி மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்தனர். பிறந்தநாள் விழாவில் அனைவருக்கும் அருஞ் சுவை விருந்து மட்டன் பிரியாணி 5000க்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டது. விழாவில் திமுக கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு வாழ்த்தி சென்றனர். பிறந்தநாள் விழாவை தலைமை ஏற்று நடத்திய மாவட்ட பிரதி நிதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி 5வது வார்டு கவுன்சிலருமான ர.சொக்கலிங்கம் அவர்களுக்கு திமுக கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பாராட்டி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலை.யில் வினாத்தாள் கசிந்த விவகாரம்: சிபிசிஐடி விசாரணைக்கு பரிந்துரை

திருநெல்வேலி: ஜூன்.6-

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கு, திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் சந்தோஷ் ஹாதிமணி பரிந்துரை செய்துள்ளார்.




திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கடந்த 27ம் தேதி நடைபெறவிருந்த பி.காம். பட்டப் படிப்புக்கான தொழிற்சாலை சட்டம் (இன்டஸ்ரியல் லா ) என்ற பாடத் தேர்வுக்கான வினாத்தாள் கசிந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அன்று நடக்கவிருந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு, புதிய வினாத்தாள் தயாரிக்கப்பட்டு, மே 30ம் தேதி மறுதேர்வு நடத்தப்பட்டது.

வினாத்தாள் கசிந்தது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு, நெல்லை பேட்டை காவல் நிலையத்தில், பல்கலைக்கழக பதிவாளர் சாக்ரட்டீஸ் புகார் அளித்தார். அதனடிப்படையில் பேட்டை போலீஸார் 6 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணையை சிபிசிஐடி போலீஸாருக்கு மாற்ற, மாநகர காவல் துறை ஆணையர் சந்தோஷ் ஹாதிமணி பரிந்துரை செய்துள்ளார்.

சுந்தரனார் பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட 99 கல்லூரிகளில் தேர்வு நடைபெற்றுள்ளதாலும், தேர்வு நடைபெற்ற கல்லூரிகள் அமைந்துள்ள 4 மாவட்டங்களிலும் விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், வழக்கை சிபிசிஐடிக்கு மாற்ற பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161